# ஈழத்தில் தமிழ் அகராதி முயற்சிகள்: ஒரு பார்வை

ராஹிலா ஷியாத்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

சொல்லுக்குப் பொருள் கூறும் முயற்சியோடு அகராதி தோற்றம் பெறுகின்றது. இது தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் சடுதியாக தோற்றம் பெற்ற ஒன்றாக அமையவில்லை. அதாவது பழம் பெறும் இலக்கண நூர்லாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள இடையியல், உரியியல், மரபியல் எனும் மூன்று இயல்களிலிலும் சொற்களுக்கான பொருள்கள் தரப்பட்டுள்ளன.இலக்கணக் கல்வியின் ஒரு பகுதியாக இருந்த சொற் பொருள் கூறும் மரபு தனி ஒரு பிரிவாக வளர்ந்து நிகண்டுகளின் தோற்றத்திற்கு காரணமாகியது. ஐரோப்பியரின் வருகையோடுதான் தமிழில் நவீன முறையிலான அகராதிகள் தோற்ற ஆரம்பித்தன. நிகண்டுகள் பா வடிவில் அமைந்திருந்தமையால் தமிழைக் கற்ற நேரிட்ட ஐரோப்பிப் பாதிரிமார்களால் நிகண்டுகளைப் புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்பட்ட காரணத்தினால் அவர்கள் நவீன முறையில் அமைந்த அகராதிகளை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.இதனால் அவர்கள் நவீன அகராதிகள் பலவற்றை உருவாக்கினர். அவற்றைப் பின்பற்றியே தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் பல தமிழ் அகராதிகள் தோன்றின. ஈழத்தில் எழுந்த தமிழ் அகராதிகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பிரதான சொற்கள்**: அகராதி, நிகண்டு

## அறிமுகம்

சொல்லுக்கு பொருள் கூறும் முயற்சிதான் முதன்முதலில் அகராதி தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். 'அகராதியியல்' என்ற சொல்லைக் குறிக்கும் Lexicography என்ற சொல்லானது, Lexico, Graphy என்ற இரு சொற்களின் கூட்டுச் சேர்க்கையாக அமைகின்றது. Lexicoஎன்றால் சொல் என்ற பொருளையும் Graphy என்றால் எழுதுதல் என்ற பொருளையும் கொண்டு அமைந்துள்ளது. இந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, Lexicography என்பது 'சொற்களை அகராதிவடிவில் எழுதுதல்' எனப் பொருள் தருகின்றது.

ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியானது Lexicography என்பதற்கு 'அகராதி அல்லது பேரகராதித் தொகுத்தல் அல்லது எழுதுதல், அகராதித் தொகுக்கும் கலை அல்லது 'பயிற்சி'[1]எனப் பொருள் விளக்கம் தருகின்றது. அதாவது ஒரு மொழியில் வழங்கப்படும் சொற்களை ஒரு சில ஒழுங்கு முறைகளின்கீழ் தொகுத்து அவற்றை அகரவரிசைப்படித் தொகுத்துசொல் - பொருள் விளக்கம் எனும் வகையில் வழங்கப்படும் நூற்கள் அகராதிகள் எனப்படுகின்றன. இவ்வகராதிகளை, அவற்றுள் இடம்பெறும் சொல்லின் தன்மை, வகை, மொழிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் பல வகைகளாகப் காணப்படுகின்றன. அந்த வகையில் மொழிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒருமொழி, இருமொழி, பன்மொழி அகராதிகள் எனப் பாகுபடுத்தப்படுகின்றன. சொற் பொருள் விளக்கத்துக்கு துணை செய்வன இலக்கண நூல்களும் அகராதிகளுமாகும். 'தமிழில் தோன்றிய பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் தொடக்கம் அதன் பின்பு தோன்றிய மரபிலக்கண நூல்கள் அனைத்தும் மொழியின் இலக்கண அமைப்பை விளக்குவதோடு சொற்பொருளை விளக்கும் அகராதிக் கூறுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. தொல்காப்பியத்தில் இடையியல், மரபியல், உரியியல் ஆகிய மூன்று பகுதிகளில் சொற் பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன' என பெ. மாதையன் (1997)[2] குறிப்பிடுகிறார்.

இவற்றுள் உரியியலில் தனித்தன்மை கொண்ட கடினச் சொற்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்குப் பொருள் தரப்பட்டுள்ளன. அதாவது கடின சொற்களை விளக்குவதற்கு ஒரு சொல் ஒரு பொருள; (monosemy), பல சொல் ஒரு பொருள் (synonmy), பல்பொருள் ஒரு சொல் (polysemy), போன்ற உத்திமுறைகள் கையாளப்பட்டுள்ளதாக எச்.சித்திரபுத்திரன் (2004) கூறுகிறார்.[3]

### ஒரு சொல் ஒரு பொருள் (monosemy)

(உ-ம்)'பயப்பே பயனாம்' (உரி 9)
(பயப்புஙூபயன்)
"பசப்பு நிறனாகும்"(உரி 10)
( பசப்பு ஙூ நிறன்)
"இயைபே புணர்ச்சி"(உரி 11)
(இயைபு= புணர்ச்சி)

**பல சொல் ஒரு பொருள் (synonomy)**

(உ-ம்)"மழவும் குழவும் இளமைப் பொருள"(உரி 14)

(மழ, குழ ஸ்ரீ இளமை)

"அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்"(உரி 19)(அதிர்வு, விதிர்ப்பு ஸ்ரீ நடுக்கம்)

**பல்பொருள் ஒரு சொல் (polysemy)**

ஒரு சொல்லுக்குப் பல சொற்களைப் பொருளாகத் தரும் முறையும் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.

(உ-ம்) "கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்றேற்று ஆயீர் ஐந்தும்
மெய்படத் தோன்றும் பொருட்டா கும்மே" (உரி 87)[4]

அதாவது கடி என்ற உரிச் சொல் நீக்குதல், கூர்மை, காவல், புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்னால் நின்று அறிவித்தல் ஆகிய பத்து பொருள்களைக் குறிக்கும் என்று கூறப்படுகிறது. இவ்வாறு அமைந்துள்ள உரியியல் மரபில் இன்றைய அகராதிகளின் அமைப்பினையும் அகராதியியல் உத்திகளையும் முழு நிலையில் காண முடியாவிட்டாலும் அகராதிக் கூறுகள் இடம் பெற்றுள்ளதாக சுந்தரசண்முகனார் (1965)[5], வ. ஜெயதேவன் (1985)[6], ஆகியோர் கூறியுள்ளனர்.

இவ்வாறு மரபிலக்கண உரியியல் மரபானது காலப் போக்கில் நிகண்டு மரபு தோன்றக் காரணமாக அமைந்தது. அதாவது, இடைக் காலத்துப் புலவர்களால் தமிழும் வடமொழியும் கலந்த நடையில் இலக்கியங்கள் புனையப்பட்டதால் மொழி அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. மாறி வரும் மொழி அமைப்பையும் சொற் தொகுதியையும் புரிந்து கொள்ள அதற்கான நூல்களின் தேவை உணரப்பட்டது. இதை நிறை வேற்றுவதற்காக நிகண்டுகள் எனும் சொற்களுக்கு பொருள் கூறும் நூல்கள் பா வடிவில் தோற்றம் பெற்றன. இவை பெரும்பாலும் ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி,ஒரு சொல் பல் பொருள் பெயர்த்தொகுதி, பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்ற அடிப்படையில் அமைந்துள்ளன. 18 ஆம் நூற்றாண்டில் திவாகரம் நிகண்டின் தொடக்கம் முதல், அகராதிகளின் தோற்றம் வரைக்கும் பல நிகண்டுகள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன.

மொழி வளர்ச்சியின் காரணமாகவும் பிறமொழித் தாக்கத்தின் விளைவாகவும் ஏற்பட்டசொற் பெருக்கத்தினாலும் பொருள் மாற்றத்தினாலும் எல்லாச் சொற்களின் பொருளையும் சுட்ட வேண்டிய சூழல் பிற்காலத்தில் உருவானது. மேலும், ஐரோப்பியரின் வருகையை அடுத்து, தமிழ் மொழியில் ஏராளமான அறிவியல் கலைச் சொற்கள் படைக்கப்பட்டன. இது இடைக்காலத்து எழுந்த ஒரு மொழி மாற்றமாகும்.

மேலும் சமயப்பணியின் பொருட்டு தமிழகம் வந்த ஐரோப்பியப் பாதிரிமார் தமிழ் மொழியைக் கற்க முற்பட்டபோது, தமிழைக் கற்பதற்கும் மக்களோடு மக்களாய்க் கலந்து உரையாடுவதற்கும் அவர்களுக்கு அகராதி தேவைப்பட்டது. நிகண்டுகளின் பாக்களைப் படிப்பதும் மனனம் செய்வதும் கடினமாக இருந்தது. அத்தோடு நிகண்டுகள் அன்றாட உரையாடலுக்கும் உதவியாக அமையாது என்று உணர்ந்த அவர்கள்,அகராதிகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் முதற் கட்டமாக கி.பி. 1732இல் வீரமா முனிவரால் சதுரகராதி தோற்றுவிக்கப்பட்டது. இது பெயர், பொருள், தொகை, தொடை என நான்கு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதோடு நிகண்டுகளில் இடம் பெற்றுள்ள பாக்களை அகரவரிசையில் உரைநடையில் தந்து தமிழில் தோன்றிய முதல் அகராதியாக பெருமையுடன் திகழ்கின்றது.

தமிழ் மொழியின் பல்வேறு பரிணாம வளர்ச்சிக் கட்டங்களின் விளைவுகளின் ஒரு பகுதியாக அகராதிகளின் வளர்ச்சிக் கட்டங்களும் காணப்படுகின்றன. அந்தவகையில் ஒரு மொழி அகராதிகளின் வரலாற்றைப் பொறுத்த வரையிலும் பல வளர்ச்சிப் போக்குகளைக் 3 ஆம் நூற்றாண்டில் தோன்றிய மரபிலக்கண நூலான தொல்காப்பித்தை முதலாகக் கொண்டு 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சுவாமிநாதம் வரை இடம் பெற்றுள்ள இலக்கணஉரியியல் மரபில் தோற்றம் பெற்று, நிகண்டு மரபுவழியாக நவீன அகராதி மரபு வளர்ச்சி அடைந்துள்ளது.சதுரகராதியைத் தொடர்ந்து தமிழில் ஒரு மொழி அகராதிகளின் வளர்ச்சி ஆரம்பமானது.

தமிழ் ஒரு மொழி அகராதிகளை அவற்றின் அமைப்பைப் பொறுத்து,

1. நான்கு பிரிவுகளைக் கொண்ட ஒருமொழி அகராதிகள்,
2. இரண்டு அல்லது மூன்று பிரிவுகளைக் கொண்ட ஒருமொழி அகராதிகள்,

3. பிரிவுகளே இல்லாத முழுநிலையனான ஒருமொழி அகராதிகள் என பாகுபடுத்தப்பட்டுள்ளன.

ஈழத்தைப் பொறுத்தவரையில் அகராதிகளின் தோற்றமானது தமிழ் நாட்டில் நிகண்டுகளின் தோற்றத்தோடு ஆரம்பிப்பதை அவதானிக்க முடியும். ஈழத்தில் நிகண்டுகள் தோற்றம் பெறாவிட்டாலும் இவற்றின் பயன்பாடு ஈழத்தில் பெருமளவு பரந்து காணப்பட்டுள்ளது. இங்கு நிகண்டுகளின் பதிப்புமுயற்சிகள் பல இடம் பெற்றுள்ளன.

தமிழை அகராதிக்குள் கொண்டு வந்த பெருமை ஐரோப்பியரையே சேரும். இவர்களின் முயற்சியினால் தமிழுக்குப் பல்வேறு வகையான அகராதிகள் கிடைத்தன. அவ்வாறே ஈழத்தவரும் ஐரோப்பியரோடு சேர்ந்தும் தனிப்பட்ட முறையிலும் பல்வேறு வகையான அகராதி முயற்சிகளில் ஈடுபட்டனர். இவ்வகையில் ஈழத்தறிஞர் சைமன் காசிச்செட்டி அவர்களின் சமஸ்கிருத – தமிழ் அகராதி (1807- 1867), நீர்வேலி சங்கரபண்டிதர் அவர்களின் தாது மாலை (1821-1891),சந்திர சேகரப்பண்டிதர் அவர்களின் யாழ்ப்பாணத்தமிழ் அகராதி அல்லது மானிப்பாய் அகராதி (1842), மானிப்பாய் ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை அவர்களின் அபிதானகோசம் (1902), புலாலியூர் நா. குதிர வேற்பிள்ளை அவர்களின் தமிழ்ப்பேரகராதி (1899), கு.வை. கதிரவேற்பிள்ளை அவர்களின் தமிழ்சொல் அகராதி அல்லது தமிழ்ச் சங்க அகராதி (1904),ஞானப்பிரகாச அடிகளாரின் சொற்பிறப்பு, ஒப்பியல் அகராதி (1939-1946), சுன்னாகம் அ. குமாரசுவாமி புலவர் அவர்களின் இலக்கியச் சொல்லகராதி (1915) என்பனஈழத்தவரின் ஆரம்பகால அகராதி முயற்சிகளில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. மேலும் சில அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், பழமொழிகள் என்பனவும் தோற்றம் பெற்றுள்ளன.

**சமஸ்கிருத – தமிழ் அகராதி** (1807- 1867)
சைமன் காசிச் செட்டி என்பவரால் சமஸ்கிருத தமிழ் அகராதி உருவாக்கப்பட்டுள்ளது. இவர் வாழ்ந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, இவர் தொகுத்திருக்கும் சமஸ்கிருத தமிழ் அகராதி முயற்சியானது, இந்த இரண்டு மொழிகளின் இணைந்த அகராதி முயற்சியில் முதலாவதாகக் கொள்ள முடியும். பதார்த்த பாஸ்கரம் எனும் சமஸ்கிருத தமிழ் அகராதியே சமஸ்கிருத தமிழ் அகராதியியலில் அச்சேரிய முதலாவது நூலாகக் காணப்படுகின்றது.

**தாது மாலை** (1821-1891)
நீர்வேலி சங்கரபண்டிதர் அவர்களால் வெளியிடப்பட்ட தாதுமாலை என்னும் அகராதியில் வடமொழிச் சொற்கள் கிரந்த வடிவில் அகர நிரலில் அமைக்கப்பட்டு, அவற்றின் பொருள் வேறுபாடுகள் தமிழில் விளக்கப்பட்டுள்ளன. இது 1908 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில்பதிப்பிக்கப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணத்தமிழ் அகராதி அல்லது மானிப்பாய் அகராதி (1842)**
இது யாழ்ப்பாணத்து அறிஞர் சந்திர சேகரப்பண்டிதர் என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலும் எல்லாத் தமிழ் சொற்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 58,500 சொற்களுக்கு பொருள் கூறும் இது சதுரகராதியை விட நான்கு மடங்கு பெரியது. பெயர், பொருள், தொகை என மூன்று பிரிவுகளையுடையது. தமிழ் ஒருமொழி அகராதிகளுள் இதுவே முதல் பெரிய அகராதியாகும்.இது மெனுவல் தமிழ் அகராதி (The Manual Dictionary of the Tamil Language) என்றும் அழைக்கப்படுகிறது. ரெவரண்ட் லெவி ஸ்போல்டிங் (Rev. Levi Spaulding) என்பவரால் 1842 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது.

**அபிதானகோசம்** (1902)
1902 இல் மானிப்பாய் ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை அவர்கள் எழுதிய அபிதான கோசம் எனும் நூலே தமிழ் அகராதியியல் பிரிவில் சொற்களஞ்சியங்களுக்கான முதலாவது நூலாக விளங்குகின்றது. பல்வேறு சிறப்புப் பெயர்களை அகர வரிசையில் கொண்டு விரிவான விளக்கங்களுடன் அமைந்துள்ளது.

**தமிழ்ப்பேரகராதி** (1899)
யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட இந்த அகராதியானது, சதுரகராதி, யாழ்ப்பாண அகராதியைப்போல் விரிவான அகராதியாக விளங்குகிறது. இந்த அகராதியின் சிறப்புக் குறித்து இவ்வகராதியின் ஆசிரியர்பின்வருமாறு கூறுவது நோக்கத் தக்கது.

“இதுகாறும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சதுரகராதி, மானிப்பாயகராதி, விரிவகராதி முதலிய அகராதிகளில் அடங்கியிருக்கிற சொற்களோடு நூதனமாக அரிய பெரிய இலக்கிய இலக்கணங்களின்றும் எடுக்கப்பட்ட அநேகஞ் சொற்களை முறைப்படி சேர்த்தும், அவ்வாறு சேர்க்கப்பட்ட சொற்களுக்கு ஆங்காங்கு நட்சத்திரப் புள்ளிகள் அமைத்தும் பெயரகராதியில் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று, ஏவல்வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று, உரிச் சொல்

முதலிய வேறுபாடுகளை மாணவர் எளிதில் உணருமாறு அடியிற் குறியீடுகள் அமைத்தும் வெளியிடப்பட்டுள்ளது.”[7]

இவர் தம் அகராதிக்குத் ‘தமிழ்ப்பேரகராதி’ என்று பெயர் வைத்துள்ளார். 1911இல் பி.வே. நமச்சிவாய முதலியார் அவர்களால் இவ்வகராதியானது தமிழ் மொழி அகராதி என்னும் பெயரில் மூன்றாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. இம்மூன்றாம் பதிப்பில் முன் பதிப்பில் வினைச்சொல், உரிச்சொல், புதுச்சொல் ஆகியவற்றிற்குத் தரப்பட்டுள்ள குறியீடுகள் முற்றாக நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் பதிப்புரையில் இதனை வெளியிட்ட பி. வே. நமச்சிவாய முதலியார் தமிழைக் குறித்தும் முன் வந்த அகராதிகளின் தன்மை குறித்தும் தாம் புதிதாகச் சேர்த்துள்ள சொற் கோவை பற்றியும் தெளிவுற விளக்கியுள்ளார். இதிலிருந்து முந்திய அகராதிகளை விடவும் ஆயிரக்கணக்கான சொற்கள் இவருடைய அகராதியில் இடம் பெற்றுள்ளமையை அறியலாம்.

**தமிழ்சொல் அகராதி** அல்லது **தமிழ்ச் சங்க அகராதி (1904)**

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் ஒரு மொழி அகராதி வரலாற்றில் புதியதொரு மாற்றத்தைக் கொண்டு சிறப்புடன் வெளிவந்துள்ள அகராதி கு. வை. குதிர வேற்பிள்ளை என்பவரால் 1904 இல் வெளியிடப்பட்ட தமிழ்ச் சொல்லகராதி ஆகும். இந்த அகராதிக்கு முந்திய அகராதிகளில் இடம் பெறாத பல சொற்கள் தமிழ் நூல்கள் பலவற்றில் விரவிக் கிடப்பதை உணர்ந்த இவர் பல்வேறு நூல்களையும் வாசித்துப் புதுச் சொற்கள் பலவற்றைத் திரட்டினார். இவர் ஆசிரியராகவும் வழக்கறிஞராகவும் நீதிபதியாகவும் பணியாற்றிய காலங்களில் இவரால் அகராதிப் பணியை முழுமையாகக் கவனிக்க முடியாமலிருந்தது. நீதித் தொழிலிருந்து ஓய்வு பெற்ற பின்பே ஐந்தாண்டுகள் முழுமையாக அகராதித் தொழில் ஈடுபட்டு, இவ்வகராதியை எழுதி முடித்தார். இவருடைய அகராதிக்கு சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், வல்லிபட்டி சி. ஆறுமுகப் பிள்ளை, நல்லூர் சரவணமுத்துப் பிள்ளை முதலியோர் உதவி புரிந்துள்ளனர். முந்திய அகராதிகளில் இல்லாத சிறப்புக் கூறுகள் இவருடைய அகராதியில் இடம் பெற்றுள்ளன.

1. அகராதி வரிசையில் உயிர் மெய்க்கு முன் மெய் வருமாறு சொற்களை அமைத்துள்ளார்.
2. சொற்களின் பொருள்களையும் முந்திய அகராதிகளில் இடம் பெற்றிருப்பதைப் போல அகர வரிசையில் அமைத்துள்ளார்.

ஆயினும் ஒன்றுக்குமேற்பட்டு வரும் பொருள்களை எண் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். சொற்களின் பொருள்களை வரையறுத்து விளங்கிக் கொள்வதற்கு உதவியாகப் பல நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துத் தந்துள்ளார். அவற்றை (உ-ம்) என்று குறிப்பிட்டு, அவை காணப்பட்ட இடங்களையும் சுட்டியுள்ளார். முதன்முதலாகச் சொற்பொருளுக்கு ஆதாரமான மேற்கோள்களைப் பல நூல்களிலிருந்து தேடித் தந்த பெருமை இவரையே சாரும்.

உ-ம் அ∴குதல் 1.அளவிற் குறைதல், சுருங்கல்.(உ-ம்)“அ∴கிஇய” (நன்.எழுத்திய.ரு.) 2.கழிந்துபோதல்.(உ-ம்)“அல்லாயிர மாயிரம∴கினவால்” (இராமா. அதிகா.கக) 3.குவிதல். (உ-ம்)“அரிவையர் வாண்முகமதியா லாம்பன் மலர்தரநோக்கி யிரவணைந்த தென்கரையினி வர்ந்தவைமீட்ட∴குதலும்’ (காஞ்சிபு.திருக்க. கழஅ) 4.நுண்மையாதல். (உ-ம்)“அ∴கியகன்ற வறிவென்னாம்’ (வள்.களரு.) 5. நீர் வற்றுதல். (உ-ம்) “அ∴காநின்ற பெருநதிகள்” (இரகு. திக்கு. கச.)[8]

1. வடமொழி வழிவந்த சொற்களுக்குப் பொருள் கூறிய பின், அவ்வட சொல்லை இரு மருங்கிலும் பகர அடைப்பிட்டுக் கிரந்த எழுத்திலும் எழுதிச் சேர்த்துள்ளார்.

2. முன்னைய அகராதிகளில் நகர வர்க்கத்தில் சேர்க்கப்பட்டிருந்த வட சொற்களை இவர் நகர வர்க்கத்திலும் சேர்த்துத் தந்துள்ளார்.

3. பெரும்பாலான சொற்களுக்குரிய மூலம் முதலியவற்றையும் பொருளுரைகளின் பின் சேர்த்துள்ளார்.

4. ஒருமை வடிவிலேயே சொல்லை அமைத்து அதன் பன்மையும் காண்க என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் சில இடங்களில் பயன்பாடு கருதி இருவகை வடிவங்களையும் கொடுத்துள்ளார்.

5. வினைச்சொற்களைத் தொழிற் பெயர் வடிவில் தந்துள்ளார். எனினும், சில இடங்களில் எச்ச வினைகளுக்கும் தனிப்படப் பொருள் உரைக்கின்றார்.

6. முதனிலையிலும் இறுதியிலும் வராது என்ற எழுத்துக்கள் முதல், இறுதிகளில் வருதலும் இடைநிலையில் வேற்று நிலை மயக்கமாய் வராது என விலக்கப்பட்டவை மயங்கி

வருதலும் இவ்வகராதிச் சொற்கள் சிலவற்றில் காணப்படும். ஆனால், அவை வடநூலார் வியாகரணத்தில் விதித்தபடி தமிழ் நூல்களிலும் சிறுபான்மையாக வந்துள்ளமையால் அவ்வாறு கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

7. இந்துஸ்தானிச் சொல், தெலுங்குச் சொல் ஆகியவற்றை இந்துஸ், தெலுங்கு என்று இனம் சுட்டி அறிவித்துள்ளார். உலக வழக்கிற் கண்ட சொற்களை, வழக்கு என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

8. உதாரணமாக இவர் தம் அகராதியில் எடுத்தாண்ட நூல்கள் ஏறத்தாழ 340. இவற்றைச் சுருக்கக் குறியீடு தந்து அகராதியில் பயன்படுத்தியுள்ளமை பற்றி ஓர் அட்டவணையும் சேர்த்துள்ளார்.

இவ்வாறு ஓர் அகராதியில் அவசியம் இடம் பெற வேண்டிய சிறப்பு அம்சங்களைக் கொண்டு அமைந்த இவ்வகராதியின் முதற்பகுதியில் அகரத்தை முதலாகக் கொண்ட சொற்கள் மட்டுமே அடங்கியிருந்தன. தொடர்ந்து ஏனைய பகுதிகள் அச்சிடுவதற்கு முன் கதிரவேற்பிள்ளை மரணமடைந்தார். அதன் பின்னர் மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவிய பெருமகனார் பாண்டித் துரைத்தேவரவர்கள் அவருடைய குமாரர் திரு. க. பாலசிங்கம் என்பவரிடமிருந்து அகராதிப் பிரதிகளை பெற்றுச் சங்கத்து வித்துவான்களாகிய மு. ரா. அருணாசலக் கவிராயர்,சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர், திருநாராயணையங்கார், வி. ஸ்ரீநிவாஸச்சாரியார்,நா. சுந்தரேசுவரையர், மு. இராகவையங்கார் ஆகியோரைக் கொண்டு பரிசோதித்து தொகுப்பாசிரியர் கதிரவேற்பிள்ளை இட்ட பெயராகிய ‘தமிழ்ச் சொல்லகராதி’ என்னும் பெயருடனேயே அச்சிட்டு வெளியிடச் செய்தார். இது மூன்று பகுதிகளாக முறையே 1910, 1912, 1923 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது. அத்தோடு இது மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளியிடப்பட்டமையால் ‘தமிழ்ச் சங்க அகராதி’ என்னும் சிறப்புப் பெயருடன் விளங்குவதோடு 1800 பக்கங்களில் 63,900 சொற்களுக்கு பொருள் விளக்கமளிக்கிறது.

[7]கதிரவேற்பிள்ளை, என்., தமிழ்ப்பேரகராதி, நிரஞ்சனி வலாச அச்சுக் கூடம், சென்னை, 1989, முன்னுரை
[8]கதரவேற்பிள்ளை, C.W.,., தமிழ்ச்சொல் அகராதி, யாழ்ப்பானம், 1904, முலாம் பாகம், ப.1.

**சொற்பிறப்பு, ஒப்பியல் அகராதி** (1938-1946)

சொற்பிறப்பியல் அகராதியானது சிறப்பு அகராதி(Specialised Dictionary)வகையைச் சார்ந்தது. சொற்பிறப்பியல் அகராதியை ஆங்கிலத்தில் Etymological Dictionaryஎன்பர். Etymos என்பது ‘உண்மை’ என்ற பொருளை கிரேக்கச் சொல் தருகிறது. Etymology என்ற சொல் ‘சொல்லின் உண்மை வரலாற்றைக் கூறுதல்’ என்ற பொருளைத் தருகின்றது. உலக மொழிகள் பலவற்றுக்கு சொற்பிறப்பியல் அகராதிகள் காலத்துக்குக் காலம் உருவாக்கப்பட்டுள்ளன. கி.பி. 1662 இல் கெகார்டு ஜொஹன்ஸ் வொஸியஸ் (Ghehard Johannes Vossies) என்பவர் வெளியிட்ட இலத்தீன் சொற்பிறப்பியல் அகராதி (Etymologicum Linguae Latinae) உலகில் வெளிவந்த முதல் சொற்பிறப்பியல் அகராதியாக விளங்குகின்றது. இதற்குப் பிறகு பல மொழிகளைச் சார்ந்த சொற்பிறப்பியல் அகராதிகள் வெவ்வேறு கால கட்டங்களில் தோற்றம் பெற்றுள்ளன.

அந்தவகையில், 1938 இல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தலை சிறந்த பேறிஞரான ஞானப்பிரகாச அடிகளார் தமிழ் சொற்பிறப்பியல் அகராதியின் முதல் ஆறு சிறு பகுதிகளை 364 பக்கங்களை உள்ளடக்கி வெளியிட்டார். இது “A Comparative Etymological Lexicon of the Tamil Language) என்றழைக்கப்பட்டது. இவர் தம் பல்லாண்டு கால ஆய்வின் முடிவாக இந்தோ - ஐரோப்பிய மொழிகளுக்கு தமிழே மூலம் எனக் கண்டறிந்தார். ஜேர்மானிய மொழிக்கு கிறிம் என்பவரும் ஆங்கில மொழிக்கு கீற்று என்பவரும் சொற்பிறப்பியல் நெறிகளை அமைத்தது போல இவரும் திராவிடச் சொற்பிறப்பியல் நெறிகளை(Law of Drvidian Etymology) அமைத்தார். அத்தோடு, ஒலிப்பு நெறிமுறைகளும் Phonetic Transformations, Semantic Changes, The Foregoing Sections in Tamil போன்ற விடயங்களையும் விரிவாக விளக்கியுள்ளார். மொழியாராய்ச்சிக்கு வழக்கிலுள்ள சொற்களை கருத்திற் கொள்ளாமல் இலக்கிய சொல்லாட்சிகளை மட்டும் கவனத்திற் கொள்ளக்கூடாது என்றும் இந்தோ- ஐரோப்பிய மொழியினை ஆராய்வோர் ஒலியொப்புவமையை மாத்திரம் கருதாமல், சொல்லின் வேரும் வரலாறும் பற்றிய அடிப்படை உண்மைகளை ஆராய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இவ்வகராதியின் சிறப்புக் குறித்து, சுந்தர சண்முகனார் (1965:418)[9] பின்வருமாறு கூறுவது நோக்கத்தக்கது.

சென்னைப் பல்கழைக் கழகத்தில் தமிழ்ப் பேரகராதியின் சிறப்புக்கூறுகளுள் பல அமைந்திருப்பதோடு, மேலும் சொற்பிறப்பும் மொழி ஒப்பியலும் விரிந்த அளவில் கூறப்பட்டிருப்பது இவ்வகராதிக்குத் தனிச் சிறப்பாகும். அதாவது, தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லாலும் தமிழ்ச் சொல்லாலும் பொருள் கூறப்பட்டிருக்கும் இவ்வகராதியில்,

எடுத்துக் கொண்ட சொல் எந்த வேரிலிருந்து எப்படிப் பிறந்து உருவாகின்றது என்பது காட்டப்பட்டு இருப்பதோடு, அத்தமிழ்ச் சொல், மற்ற இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலும் ஒத்த நிலையில் வழங்கப்படுகின்ற அவ்வம் மொழியுருவங்களும் (Index of Words from Indo– European Languages) கொடுக்கப்பட்டிருப்பது, இவ்வகராதிக்கு மட்டுமன்றித் தமிழ் மொழிக்கும் மாபெரும் சிறப்பளிப்பதாகியுள்ளது”.

இவ்வகராதியின் ஆசிரியரான ஞானப்பிரகாச அடிகளார் இதன் முன்னுரையில் தமிழ்ச் சொற்களின் வேரிலிருந்துதான் உலக மொழிகளின் சொற்கள் தோன்றியுள்ளதாக பின்வரும் கருத்துக்களின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

“தமிழ்ச் சொற்கள் முதன்முதல் மக்களினத்தில் மொழி தோன்றத் தொடங்கிய காலத்தில் எழுந்த சொல்லொலிகளை அடிப்படையாகக் கொண்டவை. தமிழ்ச் சொற்களால் உணர்த்தப்படும் கருத்துக்கள், மக்களினத்தின் பொதுப் பண்பைக் குறிக்கும் அடிப்படையாகும். எனவே கூர்ந்து ஆராயின், தமிழ்ச் சொற்களின் வேரிலிருந்தே உலக மொழிகளின் சொற்கள் தோன்றிப் பல்வேறு வடிவங் கொண்டன என்பது புலப்படும்”[10]

**இலக்கியச் சொல்லகராதி** (1915)

தமிழ்ச் சொல்லகராதியைத் தொகுப்பதற்கு கதிரவேற்பிள்ளைக்கு முழு மூச்சாக நின்று உதவி புரிந்த சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் ‘இலக்கியச் சொல்லகராதி’ என்னும் பெயரில் ஒரு சிற்றகராதியை 1915 இல் வெளியிட்டார். இது பெயருக்கு ஏற்றாற்போல் இலக்கியச் சொற்கள் மட்டுமே கொண்டமைந்துள்ளது. இதில் தமிழ்ச் சொல்லகராதியைப் போலவே மெய்யெழுத்து முதலாக வைத்து வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இவர் ஆதாரமாக எடுத்துக் கொண்ட இலக்கிய நூல்கள் 61. அவற்றின் பெயர்ப்பட்டியலை உதாரண நூற் பெயர் என்ற தலைப்பில் தந்துள்ளார். பல இடங்களில் சொற்பொருள் காணும் நூலின் பெயரை சுருக்கக் குறிப்பாய் பிறை வளைவுக்குள் காட்டியுள்ளார். இருந்தாலும்,நூலின் உள்ளே எந்தப் பகுதியில், எந்தப் பாடலில் எந்த வரியில் வருகிறது என்ற குறிப்புகள் எதுவும் கொடுக்கப்படவில்லை. சொற் பொருள் விளக்கத்தில் அகராதி அமைப்பு முறையை தவிர்த்து,ஏற்புடைய முதற் பொருள் முன்னும் தொடர்புப் பொருள் பின்னும் அமைத்துள்ளார்.
மேலும் இலக்கியச் சொற்களுள் வெளிப்படையாகப் பொருள் தரும் சொற்களைத் தவிர்த்து அரும்பதங்களுக்கு மட்டும் விளக்கம் தந்துள்ளார். நிகண்டுகளிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் 1500 க்கும் மேற்பட்ட புதிய சொற்களை சேர்த்துள்ளார். குமாரசுவாமிப் புலவர் தமது இலக்கியச் சொல்லகராதியின் முன்னுரையாக அமையும் உபக்கிரமணிகையில் அதன் அமைப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

“இவ்வகராதியிலே இலக்கியத்தில் வரும் பெயர்ச் சொற்களே பெரும்பாலும் வரும். வினைச் சொற்கள் வாரா. வினைச் சொற் பொருள் வேண்டுவோர் ஈண்டு வரும் தொழிற் பெயர் நோக்கி அறிக. ஒருவி, ஒருவ, ஒல்கி, ஒல்க, அலமந்து, அலமர, அட்டு, அட முதலிய வினைச் சொற்களின் பொருள்களை வேண்டுவோர் ஒருவுதல், ஒல்குதல், அலமரல், அடுதல் முதலிய தொழிற் பெயர்களை நோக்கி அவைகளை அறிக. இடைச் சொற்களும் இங்கே வாரா. அவைகளை நன்னூல் முதலிய இலக்கணோக்கி அறிக. உரிச் சொற்களுள்ளும் அரியனவாய திரிசொற்கள் சிலவரும்.

பெயர்ச் சொற்களுள்ளும் உலக வழக்கிலும் நிகழ்ந்து வெளிப்பட்டு நிற்கும் இயற் சொற்களும் இங்கே வாரா. ‘வெளிப்பட சொல்லே கிளத்தல் வேண்டா’ என்று ஆசிரியர் தொல்காப்பியனாருங் கூறுவர். சிவன், விட்டுணு, பிரமன்,சோழன், பாண்டியன், யானை, புலி, கரடி, பனை, பலா முதலிய இயற் சொற்களையும் அகராதி நோக்கி அறிய வேண்டமா?இவற்றால் அகராதி விரிதலன்றிப் பயனுமுண்டா! இவையன்றி இயற்கையிலே ஒரு நிலையுஞ் சற்றே வேறுபட்டு மற்றொரு நிலையுமாக இருவகை நிலையாய் நின்று ஒரு பொருளையே உணர்த்தும் சொற்களும் பற்பல.அவைகளுந் தனித்தனி இங்கே வாரா.”[11]

அகராதித் தொகுத்தல் என்பது ஒரு கடினமான முயற்சி. ‘கொடிய குற்றவாளிகளை தூக்கிலிட்டோ அல்லது கடுமையான பணிகளைச் செய்யச் சொல்லியோ தண்டிக்க வேண்டாம். மாறாக அவர்களை அகராதிகளைத் தொகுக்கும் படிபணித்தால் போதும். ஏனென்றால் எல்லாத் துன்பங்களும் இப்பணியில் அடங்கியுள்ளன. ‘அகராதிப் பணியின் சிரமம் குறித்து இலத்தீன் அறிஞர் கேல்ஜர் கூறுவதாக முனைவர் எச் சித்தார்த்தன் சொல்லும் பொருளும் என்ற நூலில்[12] கூறுகிறார். அந்த வகையில் ஐரோப்பியரின் வழிகாட்டலுக்கு மத்தியில் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து ஈழத்தறிஞர்கள் அகராதிகள் பலவற்றை எமக்கு அளித்துள்ளமை அவர்களுடைய ஆழ்ந்த அறிவையும் அயரா முயற்சியையும் புலப்படுத்திநிற்கின்றது.

**அடிக்குறிப்புக்கள்:**

1.Murugan, Dr.V.,(Editor) Oxford English – Tamil Dictionary, Oxford University Press, New Delhi .2012. P827.

2. மாதையன், பெ., அகராதியியல், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூா, 1977,ப.9

3. சித்திரபுத்தரன், எச்., முனைவா், சொல்லும் பொருளும், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்,2004 ப. 82

4. மு.கு.நூ. பக். 83,84

5. சுந்தரசண்முகனாா், தமிழ் அகராதிக்கலை, புதுவை பைந்தமிழ் பதிப்பகம், 1965, பக்.50,51

6. ஜெயதேவன்,வ., தமிழ் அகராதிக் கவையின் வளா்ச்சி வரலாறு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1985, ப.35

7. கதிரவேற்பிள்ளை, என்., தமிழ்ப்பேரகராதி, நிரஞ்சனி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1989, முன்னுரை

8. கதிரவேற்பிள்ளை, C.W., தமிழ்ச்சொல் அகராதி, யாழப்பாணம், 1904, முதலாம் பாகம், ப.1

9. சுந்தரசண்முகனாா், மு.கு.நூ. ப. 418

10.சுவமிஞானப்பிரகாசர், சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி, 1938, முன்னுரை.

11. குமாரசுவாமி, ஆ.,’உபமணிக்கிரகை’, இலக்கியச சொல்லகராதி, வித்தியாநூபாலன யந்திரசாலை, சென்னை, 1915,ப.17

12.சித்திரபுத்திரன், எச்.முனைவா், மு.கு.நூ.ப.58

**துணைநூல்கள்:**


1 வித்தியாநுபாலன இயந்திர சாலை,சென்னை.

2 சித்திரபுத்திரன், எச்., முனைவா், (2004),சொல்லும் பொருளும், அன்னம், மனை எண்-1, தஞ்சாவூா்.

3 சுந்தர சண்முகனாா், (1965),தமிழ் அகராதிக் கலை, புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச்சேரி.

4 மாதையன்,பெ., (1977), அகராதியியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூா்.

5 முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., (1902), அபிதான கோசம், நாவலா் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

6 ஜெயதேவன், வ., (1985),தமிழ் அகராதியியல் வளா்ச்சி வரலாறு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

7. Gnana Prakasar, S., (1938-46), Etymological and Comporative Lexicon of the Tamil Language, Vol -1, Thirumahal Press, Chunnaham